பக்கங்கள்: 14

# காலைக்கதிர்


Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 18 புதன்கிழமை 01.05.2024 கதிர் 175

# நாடு முழுவதும் இன்று 40 மே தின நிகழ்வுகள்

## கொழும்பில் மட்டும் 17 கூட்டங்கள், பேரணிகள்

உலகத் தொழிலாளர் தினமான இன்று இலங்கையின் பல இடங்களிலும் 40 மே தின நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 17 நிகழ்வுகள் கொழும்பில் இடம்பெறவுள்ளன. தெற்கின் முக்கிய அரசியல் கட்சிகள் ☞2



## இனி இது ரகசியம் அல்ல!

மே தினக் கூட்டங்கள், பேரணிகளால் கொழும்பு களை கட்டுகிறது. நாட்டின் பல இடங்களிலும் 40 நிகழ்வுகள் நடக்கின்றன என்றால், அவற்றில் அரைவாசி கொழும்பில்தான் நடக்கின்றன. கடந்த ஓரிரு மாதங்களாகவே நன்கு திட்டமிட்டு, தமது அரசியல் பலத்தைக் காட்டும் வகையில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் இந்த மே தினத்தைத் திட்டமிட்டுள்ளன. தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்றனவோ இல்லையோ, மே தினத்தில் தமது ஆதரவுப் பலத்தை வெளிப்படுத்தும் வழக்கத்தை தெற்கு அரசியல் கட்சிக்ள ஒரு பாரம்பரியமாகவே கொண்டுள்ளன.

வடக்கிலோ நிலமை இதற்கு நேர் தலைகீழானது. அரசியல் கட்சிகளின் ஒழுங்கமைக்கப்பட்ட மே தின நிகழ்வுகள் எவையும் இங்கு இல்லை. தொழிலாளர்களைப் பற்றிய அக்கறையோ, கரிசனையோ தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இல்லை என்பதால் அவர்கள் மே தினம் பற்றிச் சிந்திக்கவோ அக்கறைப்படவோ இல்லை. கிளிநொச்சியிலும் மட்டக்களப்பிலும் தமிழ் ☞2

## பெற்றோல் விலை 3 ரூபாய் குறைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில், சகல எரிபொருட்களின் விலைகளையும் குறைத்துள்ளது.

அதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 368 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லிற்றர் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 420 ரூபாவாகும்.

லங்கா டீசல் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 333 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 377 ரூபாவாகும். மண்ணெண்ணெய் ஒரு லிற்றர் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 215 ரூபாவாகும்.

## வாக்காளர் பட்டியலை சரிபார்க்க அறிவுறுத்து

உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என சரிபார்க்குமாறு, தேர்தல்கள் ஆணைக்குழு பொது மக்களுக்கு அறிவித்தலொன்றை விடுத்துள்ளது.

2007 ஜனவரி 31ஆம் திகதிக்கு (31.01.2007) முன் பிறந்த இலங்கையர்கள் அனைவரும் தங்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என, தேர்தல்கள் ஆணைக்குழுவின் http;//ec.lk/vrd இணையத்தளம் ஊடாக சரிபார்க்கலாம் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறில்லையெனின், தங்களது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தரை அணுகுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## உமா ஓயா திட்டம் பற்றிய வதந்திகளுக்கு ஏமாறாதீர்

### இராஜாங்க அமைச்சர் இந்திக கோரிக்கை

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித்திட்டம் மக்களிடம் கையளிக்கப்பட்டதன்பின்னர், அதனுடன் தொடர்புபட்டதாக மண்சரிவுகளோ அல்லது வேறு பிரச்சினைக்குரிய சூழ்நிலைகளோ இதுவரை பதிவாகவில்லை. மழையுடன் ஏற்படும் சிறிய ☞8

## கெஹலியவின் மேன்முறையீட்டை ஏற்பது குறித்து மே 7 இறுதி உத்தரவு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் விளக்கமறியலை நிறுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை (ரிட்) மனுவை பரிசீலிக்க அனுப்பதிப்பதா? இல்லையா? என்ற உத்தரவை மே 7 ஆம் திகதி வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கான உத்தரவு நேற்று வெளியாகுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது குறித்த உத்தரவு மே 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப ☞8

## காங்கேசன் துறைமுக சீரமைப்புக்கான மதிப்பீட்டுக்கு நிதி வழங்குகிறது இந்தியா

காங்கேசன்துறை துறைமுகத்தை சீரமைக்கும் வேலைத் திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அதன் சகல மதிப்பீடுகளுக்குமான நிதி, மானியத்தை வழங்குவதற்கு இந்திய அரசு இணங்கியுள்ளது.

இந்திய அரசின் இந்த நிதி மானியத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அதனுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களில் கையெழுத்திட முன் வருவதற்கும் நிதி, பொருளாதார ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தல் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்திய கடன் நிதி உதவியின்கீழ் துறைமுக சீர்திருத்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2017-.05.-02 ஆம் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டதுடன் நிகழ்ச்சி திட்டத்திற்கான முகாமைத்துவ ஆலோசனை சேவை வழங்குவதற்காக 2019-.12.-18 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது.

துறைமுக சீரமைப்புக்காக மதிப்பீடுகள் ஏற்கனவே ஆலோசனை சேவைகள் நிறுவனத்தினால் ☞8

## பணம் செலுத்தினால் மட்டுமே மே தினத்திற்கு பஸ் சேவை

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் பந்துல

பணம் செலுத்தினால் மாத்திரமே நாளைய மே மாதம் பேரணிகளுக்கு பஸ்கள் விடுவிக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் ☞8

## தொலைத் தொடர்புகள் சட்டத்தை திருத்த அமைச்சரவை அனுமதி

1991/25ஆம் இலக்க தொலைத் தொடர்புகள் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு ☞8

## கொவிஷீல்ட் தடுப்பூசியால் அரிதாகச் சில பக்கவிளைவு

### ஏற்றுக்கொண்டது அஸ்ட்ராசெனெக்கா

கொரோனாவைக் கட்டுப்படுத்த போடப்பட்ட கொவிஷீல்ட் தடுப்பூசியால் அரிதாக சில பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அதனை தயாரித்த அஸ்ட்ராசெனெக்கா நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

கொவிஷீல்ட் தடுப்பூசி காரணமாக ஏற்படும் பக்கவிளைவுகள் தொடர்பான வழக்கில், நீதிமன்றத்தில் அஸ்ட்ராசெனெக்கா நிறுவனம் சமர்ப்பித்த ஆவணத்தில், கொவிஷீல்ட் தடுப்பூசியால் அரிதாக இரத்தம் உறைதல், இரத்தத் தட்டுக்களின் அளவு குறைதல் போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்றைத் தடுப்பதற்கு கொவிஷீல்ட் தடுப்பூசியை அஸ்ட்ராசெனெக்கா நிறுவனமும் ☞8

## கொழும்பில் இன்று விசேட போக்குவரத்து

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று கொழும்பு நகரைச் சுற்றி கூட்டங்கள் மற்றும் பேரணிகள் இடம்பெறவுள்ளமையினால் விசேட போக்குவரத்து திட்டமொன்றை பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மே தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 40 கூட்டங்கள் மற்றும் பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். இவற்றில் கொழும்பில் மட்டும் 14 மே தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இந்தக் கூட்டங்களை காணொலி மூலம் பதிவு செய்ய அனுமதியின்றி ட்ரோன்களை பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் இடம்பெறு ☞8

## நீதியரசர்களை நியமிப்பதற்கு ரணிலுக்கு இடைக்கால தடை

பிரதம நீதியரசர் தவிர உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ ஜனாதிபதிக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 4 வரை அமுலாகும் வகையில், ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றத்தினால் ☞8

## உடல் தண்டனைத் தடைக்கு உலக அமைப்புகள் வரவேற்பு

சகல விதங்களிலுமான உடல் ரீதியான தண்டனைகளையும் தடைசெய்வதற்கு அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பை முன்னிறுத்திய மிகமுக்கிய நடவடிக்கையாக அமையும் என பாராட்டு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக

# மீண்டும் ஒரு தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கச் சில அமைப்புகள் தீர்மானம்

## வவுனியாவில் கூடிப் பேசிய பின்னர் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முகமாக தமிழ் சிவில் அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்று நேற்று வவுனியாவில்கூடியசிலதமிழ்பொது அமைப்புக்களும் தனிநபர்களும் தீர்மானம் எடுத்துள்ளனர்.

2015பொதுத்தேர்தலின்பின்னர், தமிழ்மக்கள்பேரவைஎன்றபெயரில் அரசியல்கட்சிகளையும்தமிழ்பொது அமைப்புக்களையும் இணைத்து உருவாக்கப்பட்ட கட்டமைப்பைப் போன்ற பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்குத் திட்டமிடப்படுகின்றது.

வவுனியாக் கூட்டத்தின் பின்னர், ஜனாதிபதித் தேர்தலில் ஒருபொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கானசிவில்சமூகத்தின் கூட்டுத்தீர்மானம் என்ற பெயரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதும் சிந்திப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில் 30/04/2024 அன்று வவுனியா வாடிவீடு விடுதியில் ஒன்றுகூடிய தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகத்தினர் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும்பிரயோகிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதி தேர்தலை கையாள்வது.

2. சிறீ லங்காவின் ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாகக் கையாள்வது.

3. அதற்கு அமைய ஒரு தமிழ் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது.

4. அதற்காக சிவில் சமூகமும் தமிழ்தேசியகட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.

5. தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனானசுயநிர்ணயஉரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமானஎதிர்காலகட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயல்படுவது -என்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில், திருகோணமலை மறை மாவட்ட ஆயர், தென்கைலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார், சிவகுரு ஆதீனக் குரு தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ் பல்கலைக்கழக அரசறிவியல்துறை தலைவர் பேராசிரியர் கே ரி கணேசலிங்கம், அரங்க செயற்பாட்டு குழு நிறுவுனர் கலாநிதி. க. சிதம்பரநாதன், மட்டக்களப்புஏசுசபைசமூகசெயற்பாட்டாளர்அருட்பணிதஜீவராஜ்,அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், மன்னார் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்பணி பி ஞானராஜ் (நேரு), நீதி சமாதான ஆணைக்குழு யாழ் மறை மாவட்டம், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரழுச்சி இயக்கம், தமிழ் சிவில் சமூக அமையம், வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின்சங்கம், அறிவார் சமூகம் திருகோணமலை, அகில இலங்கை மீனவர் மற்றும் விவசாய தொழிலாளர்களின் கூட்டமைப்பு, கரைச்சி வடக்கு சமாசம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், சிவில் அமைப்பு மட்டக்களப்பு, தமிழ் ஊடகத்திரட்டு,கிழக்குபல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மாவட்ட கமக்காரர் அமைப்பு வவுனியா, தமிழ் இளையோர் மக்கள் இயக்கம், தமிழர் கலை பண்பாட்டு மையம், எம்பவர் நிறுவனம், மக்கள் மனு வடக்கு கிழக்கு சிவில் சமூக குழு, குரலற்றவர்களின் குரல், மயிலத்தமடு மாதவனை கால்நடை பண்ணையாளர் அமைப்பு, சமூக மாற்றத்துக்கானஅமைப்புவவுனியா, தமிழ் சமூக செயற்பாட்டாளர்கள் இணையம் திருகோணமலை, புழுதி சமூக உரிமைகளுக்கான அமைப்பு திருகோணமலை, நலிவுற்ற சமூகங்களின் அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பு திருகோணமலை ஆகிய தனிநபர்களும்அமைப்புகளும் இணைந்தே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

# தொழிலாளர்கள் சுரண்டல் இன்று உச்சமடைந்துள்ளது

## மே தினச் செய்தியில் சுமந்திரன் தெரிவிப்பு

இலங்கையில் இன்று தொழிலாளர்களின் சுரண்டல் உச்சத்தை அடைந்துள்ளது என்று தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். மேதினத்தைஒட்டி அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக தொழிலாளர் தினமாகிய இன்று தொழிலாளர் வர்க்கத்துக்கு எனது வாழ்த்துதல்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

எமது நாட்டில் இன்று தொழிலாளர்கள் சுரண்டப்படுவது உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது. விசேடமாக பொருளாதார சிக்கலில் அகப்பட்டுள்ள இந்த காலகட்டத்தில் இதன் தாக்கம் முற்றுமுழுதாக தொழிலாளரையே பாதித்திருக்கிறது. ஊழியர் சேமலாப நிதியை சூறையாடுவது இதன் ஒரு உதாரணமாக கூறலாம்.

இப்படியாக தொடர்ச்சியாக மிதிக்கப்படுகிற தொழிலாள வர்க்கம் மீட்சிபெற வேண்டும். அதற்காகவே நாம்அனைவரும்அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். இந்தத் தேர்தல் ஆண்டிலே தமது முழுப் பலத்தையும் ஒருங்கிணைத்து ஒடுக்கப்படுகிற மக்களாகிய நாம் கட்டுக்களை உடைத்தெறிந்து விடுதலை பெறுவோம் என்று உறுதி பூண்வோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இனி இது .....

அரசுக் கட்சியின் பெயரில் மே தினக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆனால்அவை கட்சியின் மே தின நிகழ்வுகள் அல்ல. கட்சியின் உள்வீட்டுச் சண்டையால், முரண்பாட்டால், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் விரிசல், பிளவு ஆழமாகி நிரந்தரமாகிவிட்டதால் இந்த முறை கட்சி கூடிப் பேசி மே தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்யவில்லை.

பதிலாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கிளிநொச்சியிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மட்டக்களப்பிலும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளனர். இதற்கு முன்னரும் இப்படியாக மே தினக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அவை கட்சியால் அங்கீகரிக்கப்பட்டு கட்சியின் நிகழ்வுகளாகவேநடந்திருக்கின்றன. இம்முறை கிளிநொச்சி மே தினக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. கொழும்பிலிருக்கும் மனோ கணேசனுக்கும் விக்னேஸ்வரன், சிறீகாந்தா, அனந்தி சசிதரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதும் சுமந்திரன் கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை. அவர் அனேகமாக மட்டக்களப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கலாம். அத்தோடு தமிழ்த் தேசிய மே தினம் என்ற கொடியும் கிளிநொச்சிக் கூட்டத்தில் ஏற்றப்பட்டுள்ளது. மொத்தத்தில் சுமந்திரன் எதிர்ப்புக் கூட்டணி என்பதுதான் இப்போதைக்குத் தமிழ்த் தேசியம் என்றாகிவிட்டது. வாழ்க தமிழ் அரசியல்!

மக்கள் அது பற்றியெல்லாம் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. விடுதலைப் புலிகளால் துரோகிகள் என்று அறிவிக்கப்பட்ட ஆயுதக் குழுக்களையே தமிழ்த் தேசியவாதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டுக்குள்சேர்த்துக்கொள்ளமுடிந்த தலைவர்கள் சுமந்திரனை மட்டும் நீண்ட காலத்திற்கு அப்படி ஒன்றும் ஒதுக்கிவைத்துவிடமாட்டார்கள். தேர்தல் காற்று ஓய்ந்ததும் இவை எல்லாமும்கூட ஒரு ஓய்வுக்கு வந்துவிடும். ஏனெனில்கடந்தமுறை தேர்தலில்தோற்றுப்போனபலர்தான் இன்றைய எம்.பிக்கள் சிலருடன் சேர்ந்துகொண்டு இன்று தமிழ்த் தேசியம்பேசுவதில்முன்னணியில் இருக்கிறார்கள், நாளை ஒருவேளை அவர்கள்தேர்தலில்வென்றுவிட்டால் தோற்றவர்கள்அதேகத்தியைஎடுத்து இவர்களின்வயிற்றில்குற்றுவார்கள். அதனால்அதுபற்றியெல்லாம்மக்கள் அலட்டிக்கொள்ளத்தேவையில்லை, வேடிக்கை மட்டும் பார்த்தால் போதும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் கொழும்பில் தமது மே தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் இன்று இரண்டு மே தின நிகழ்வுகளில் பங்கேற்கின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையகத்தில் நடத்தும் நிகழ்வில் காலையில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி பிற்பகலில் கொழும்பில் நடக்கும் நிகழ்விலும் பங்கேற்பார். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்திகாம்பரம்தலைமையில் மலையகத்தில் நடக்கும் மே தின நிகழ்வில் கலந்துகொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அங்கிருந்து திரும்பி கொழும்பில் நடக்கும் தமது பிரதான மே தின நிகழ்விலும் பங்கேற்பார்.

வடக்கு, கிழக்கில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தின நிகழ்வும்தமிழ்அரசுக்கட்சியின்மே தினநிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன.

**ஐக்கிய தேசியக் கட்சி**

அந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் மருதானையில் நடைபெறவுள்ளது. கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில்விக்கிரமசிங்கதலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மக்களை அழைத்து வருவதற்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதிதேர்தலில்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தரப்பை ஆதரிக்கவுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

அந்தவகையில், ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, நிமல் லன்சா தலைமையிலான புதிய கூட்டணியின் அங்கத்தவர்கள் மற்றும் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

**பொதுஜனபெரமுன**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேதினக் கூட்டம் பொரளை கம்பல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கும்அதன்ஆதரவாளர்கள் அழைத்துவரப்படவுள்ளனர்.

அத்துடன், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண உள்ளிட்ட பங்காளிக்கட்சிகள் பொதுஜனபெரமுனவுடனான உறவினை முறித்துக்கொண்டுள்ள நிலையிலும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினகளில் ஒருபகுதியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலையிலும் பொதுஜனபெரமுன தனியானதொரு தரப்பாக இம்முறை மே தினத்தினை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஐக்கிய மக்கள் சக்தி**

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின்மேதினக்கூட்டம்கொழும்பு புறக்கோட்டையில் இருந்துபேரணி ஆரம்பிக்கப்பட்டுகொழும்புநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமாச தலைமையில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியின் பங்காளிக்கட்சித் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியூதீன், பேராசிரியர்பீரிஸ்தலைமையிலான அணியினர் உள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

**தேசிய மக்கள் சக்தி**

தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நாட்டின் நான்கு இடங்களில் நடைபெறவுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரத்தில் கட்சியின் பிரசார செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலும், அநுராதபுரத்திலும் நிலவும் வெப்பமான காலநிலையைக் கருத்திற்கொண்டு பேரணிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தேசியமக்கள்சக்திஅறிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பில் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தலைமையில் கூட்டம் லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு முன்னதாக பி.ஆர்.சி மைதானத்தில் பேரணி ஆரம்மாகவுள்ளது.

இதேநேரம், தேசிய மக்கள் சக்தியின் நான்காவது கூட்டம் மாத்தறையில் கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசியமக்கள்சக்தியின்மேதினக் கூட்டங்கள்நாட்டை கட்டியெழுப்பும் தீர்வுக்கு - மக்கள் சக்தி ஓரணியில்' எனும்தொனிப்பொருளில்நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

**சுதந்திரக்கட்சி**

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியில் மைத்திரிபால சிறிசேன தரப்பின் ஏற்பாட்டில் மே தினக் கூட்டம் கம்பஹா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சாரதீ துஷ்மந்த மித்திரபால ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

**தமிழரசுக் கட்சி**

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மேதினக்கூட்டம்கிளிநொச்சியிலும், மட்டக்களப்பிலும்நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்தக் கூட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30இற்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமை வகிக்கவுள்ளதோடு கட்சியின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த கூட்டத்தில் சி.வி.விக்னேஸ்வரன், மனோ கணேசன், ஸ்ரீகாந்தா, அனந்தி சசிதரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

இதேநேரம், தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்புக் கூட்டம் பெரியகல்லாறுசித்திவிநாயகர்ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக்கிளையின் தலைவர்நாடாளுமன்றஉறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் தலைமையில் பிற்பகல் 2.30இற்கு நடைபெறவுள்ளது.

**இ.தொ.க**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் கொட்டக்கலையில் நடைபெறவுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு 1700ரூபா நாளாந்த சம்பளத்தை அழுத்தமாக வலியுறுத்தும் வகையில் இந்த கூட்டம் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானும்பங்கேற்கவுள்ளார்.

**தொழிலாளர்தேசியசங்கம்**

நாடாளுமன்ற உறுப்பினர் பழனிதிகாம்பரம்தலைமையிலான தொழிலாளர்தேசியசங்கத்தின்மே தினக் கூட்டம் தலவாக்கலையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு தொழிற்சங்கப்பிரதிநிதிகள், மற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை திரட்டுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**விமல், உதய, தயாசிறி, ரொஷான் கைகோர்ப்பு**

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ, திஸ்ஸ விதாரண உள்ளிட்டவர்கள் அங்கம் வகிக்கும் மேலவை இலங்கைக் கூட்டணி,தயாசிறிதலைமையிலான மனிதநேயக் கூட்டணி, ரொஷான் ரணசிங்க தலைமையிலான நாட்டை கட்டியெப்புவதற்கான ஊழல் எதிர்ப்பு முன்னணி ஆகியவற்றின் ஒன்றிணைவில் முன்னெடுக்கப்படும்மேதினக்கூட்டம் கிருலப்பனை பொதுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

**ஏனையவை**

'அனைத்துஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் அணிதிரள்வோம் சமத்துவத்தை நிலைநிறுத்திட ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பெருளில் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

அதேநேரம், இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மே தினக் கூட்டம் முறக்கொட்டான்சேனையில் நடைபெறவுள்ளது.

மேலும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக்கூட்டம் யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது. நல்லூர் ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி சங்கிலியன் பூங்காவில்நிறைவடையவுள்ளதோடு பிரதானகூட்டமும்நடைபெறவுள்ளது.

## உடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை மற்றும் யுனிசெப் அமைப்பின்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கோரும் பீரிஸ் தமிழர் மீதான தாக்குதலுக்கும் அதைக் கோரவேண்டும்

## வடக்கு முன்னாள் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் கருத்து

ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையைக் கோரும் ஜி.எல். பீரிஸ் தமிழ் மக்களுக்கும் சர்வதேச உதவியுடன் நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு 'சர்வதேச ஒத்துழைப்பும் கண்காணிப்பும் அவசியம்' என்ற பீரிஸின் கருத்தை மகிழ்வுடன் வரவேற்பதாகவும் கூறியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல் மூன்று தேவாலயங்களிலும் நட்சத்திர ஹோட்டல் ஒன்றிலும் நடைபெற்றது. இதில் முந்நூறுபேர் வரை உயிரிழந்தனர். ஐந்நூறுபேர் வரை படுகாயமடைந்தனர். இது கடந்த ஐந்தாண்டுகளாகக் கொழும்பு அரசியல் தளத்தில் பேசுபொருளாக உள்ளது.

இதுவரை விசாரணை அறிக்கை வெளிவரவில்லை. இந்த விடயம் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் மூன்று நாள்கள் விவாதமும் நடைபெற்றது.

மூன்றாம் நாள் (27.04.2024) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தாங்கள்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் மீது கத்தோலிக்க மக்களுக்கோ நாட்டின் ஏனைய மக்களுக்கோ நம்பிக்கை கிடையாது.

விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பும் சர்வதேச தரப்பின் கண்காணிப்பும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணைக்கான விசேட பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும். விசாரணை பூரணமாக அமைய வேண்டும்.

சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது ஒன்றும் புதிதல்ல. முன்னர் உதலாகம ஆணைக்குழு விசாரணைகளில் இந்தியாவின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.

1948 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என்ற மிக முக்கியமான கருத்துகளைதெரிவித்துள்ளீர்கள்.

நீதியை நிலைநாட்ட தாங்கள் துணிச்சலுடன் தெரிவித்த இக்கருத்துகளுக்கு தமிழினம் தலைவணங்குகிறது. உலகப் பிரசித்திபெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர் நீங்கள். பலநூறு மாணவர்களுக்கு சட்டம் கற்பித்தவர் நீங்கள்.

சட்டத்தின் மூல தத்துவங்களில் முக்கியமானது சட்டம் அனைவருக்கும் சமம் மற்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதுடன் தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி என்பதையும் நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை.

முந்நூறுபேர் கொல்லப்பட்டு ஐந்நூறுபேர் படுகாயமடைந்த தாக்குதலுக்கு நீதி கோரி தாங்கள் தெரிவித்த மேற்படி கருத்துகளின் மூலம் இந்த நாட்டில் உள்ளக விசாரணைகள்மீது மக்களுக்கு நம்பிக்கை கிடையாது.

சர்வதேசகண்காணிப்பின்கீழ்சர்வதேசஒத்துழைப்புடனான விசாரணை அவசியம் என்பதை தாங்கள் அடித்துச் சொல்லியிருப்பதிலிருந்து பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட இலங்கையர் எவருமற்ற நடுநிலையான சர்வதேச விசாரணைக்குழு ஒருலட்சத்திற்கும்மேற்பட்ட ஆதாரங்களைப் பகுப்பாய்வுசெய்துயுத்தத்தில்சம்பந்தப்படாதநாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் மேலும் பல்லாயிரம்பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் வெளிப்படுத்திய அறிக்கையையும் அதுபற்றிய பூரண விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தையும் அதன் பிரகாரம் சர்வதேச நீதிபதிகள், வழக்குரைஞர்கள், வழக்குத் தொடுநர்கள் ஆகியோரை இணைத்து போர்க்குற்றம் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் ஏற்கவேண்டும்.

இவை இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என்றும் இலங்கையில் சிறந்த நீதித்துறை உண்டு. உள்நாட்டுப் பொறிமுறை மூலம் நாம் எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என்றும்




ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வரம்புமீறி செயற்படுகிறது என்றும் மூர்க்கமாக எதிர்த்த நீங்கள் இன்று மனம் திருந்தி அத்தீர்மானங்களை ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்று நாம் நம்புகின்றோம்.

எனவே உயிர்த்த ஞாயிறன்று பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க தாங்கள் கூறிய அதே அடிப்படையில் பாதிக்கப்பட்ட பல்லாயிரம் தமிழ் மக்களுக்கும் நீதி வழங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கலப்புப் பொறிமுறை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாலும் பல்லாயிரம்பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாலும் பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்க நாடாளுமன்றத்தில் பேசி வழியேற்படுத்துவீர்கள் என நம்புகின்றோம்.

தமிழினத்திற்கு நீதிகோரும் தங்களது நாடாளுமன்ற உரையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.- என்றார். (05)

# தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவின்றி இலங்கையை வழிநடத்த முடியாது

## கிழக்கு ஆளுநர் செந்தில் புகழாரம்



தமிழ் அரசு கட்சியின் ஆதரவின்றி இலங்கையை யாரும் வழி நடத்த முடியாது. இலங்கை வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு கட்சி தமிழரசுக் கட்சி.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையானது கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நினைவு எழுச்சி கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட தலைவர் ச.குகதாசன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது உரையாற்றிய கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் -

தமிழ் அரசு கட்சியின் ஆதரவின்றி இலங்கையை யாரும் வழி நடத்த முடியாது. இலங்கை வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு கட்சி தமிழரசுக் கட்சி. வடக்கு கிழக்கு மட்டுமல்ல முழு இலங்கை மக்களினதும் கொள்கை தீர்மானங்களில் சரியாக வழிநடாத்தினார்கள். தந்தை செல்வா அரசியலில் ஆரம்பம் முதல் இறுதி மூச்சு வரை திறம்பட செயற்பட்டவர். தந்தை செல்வாவின் கொள்கை இன்னும் வாழ்கிறது சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆறுமுகம் தொண்டமானுடன் பழகியவர். தந்தை செல்வாவின் சிலையை திருகோணமலையில் அமைத்து தமிழ் அரசு கட்சியுடன் இணைந்து பயணிப்பேன் என்றார்.

இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேன்காமம் குள ஆக்கிரமிப்பு பெரும்பான்மை சமூகத்தினரால் ஏற்பட்டுள்ளது இதன் மூலம் தமிழ் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் இதனை இங்குஆளுனர்முன்கூறுகிறேன்இது விடயத்தில் கவனம் செலுத்துங்கள். இந்த வருடத்தில் நாடாளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல் என நடக்கலாம். தமிழ் அரசு கட்சியின் தீர்மானம் இந்த தேர்தலில் சரியாக இருக்க வேண்டும் இந்த தேர்தல் தொடர்பில் எம் மக்களையும் மண்ணையும் பாதுகாப்பதில் கட்சிக்கு பாரிய பொறுப்பு உள்ளது.

தந்தை செல்வாவின் தொலை நோக்கில் இணக்க அரசியலில் செல்ல வேண்டும். முன்னர் இருந்த ஆளுநர் அநுராதா யஹம்பத் சில திட்டங்களை மாற்றி விட்டு சென்றுள்ளார். தீர்வின்றிய நிலையை உருவாக்கி விட்டார். நாங்கள் தீர்மானிக்கும் சக்தியாக அரசியலில் மாற வேண்டும்.

இதன் போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பண்டா செல்வா டட்லி செல்வா ஒப்பந்தத்தில் சுயாட்சி பற்றி சொல்ல வில்லை .கட்சியினுடைய பாரம்பரியத்தை நினைக்கையில் தேசத்தினுடைய தந்தையாக அரசியல் அணுகுமுறையை பார்க்கிறோம். தந்தை செல்வாவின் அரசியலை மீண்டும் ஒரு படித்து பார்க்க வேண்டும் அப்போது தான் நேர்மை கண்ணியம் அரசியல் விடுதலை என்பது புரியும் .எண்ணிக்கை குறையாமலும் நிலம் பரிபோகாமலும் இருக்க வேண்டும் என்பதே செல்வாவின் கருத்துப்படி இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது. - என்றார்.(05)

# காரைதீவில் அரிசி விநியோகம் முஷாரப் வழங்கி வைத்தார்



(வி.ரி.சகாதேவராஜா)

குறைந்த வருமானம் பெறும் குடும்பபங்களுக்கு ஆதரவு வழங்கி



அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்த வகையில் காரைதீவு பிரதேசசெயலாளர்பிரிவில்குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குஅரிசி விநியோக நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.முசாரப் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், உதவி பிரதேச செயலாளர் செ.பாத்தீபன் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர் இராஜகுலேந்திரன் மற்றும் சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் எம்.எம்.அச்சுமுகமட் கலந்துகொண்டனர்.

பயனாளிகளுக்கு அரிசி வழங்கும்நிகழ்வுநடைபெற்றது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உலக உழைப்பாளர் நாள்

இன்று உலகத் தொழிலாளர் நாள். உடல் உழைப்பை மூலதனமாகக்கொண்டு, உலகின் இயக்கத்திற்குஆணிவேராக திகழும் உழைப்பாளிகள், தங்கள் உரிமைகளை வென்றெடுத்த திருநாள் இந்த மே தினம். உழைப்பின் மேன்மையை உலகிற்கு உணர்த்தும் உண்மையான திருநாள் மே தினம். உழைக்கும் வர்க்கத்தினரின் நலன்கள் மீதான அக்கறை வெளிப்படுத்தும் நாள்.

அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் 1886– மே 3 அன்று எட்டு மணி நேர வேலையை வலியுறுத்தியப் போராடிய தொழிலாளர்களில் பலர் காவல்துறை அடக்குமுறையால் கொல்லப்பட்டனர். அதை கண்டிக்கும் வகையில் தொழிலாளர்கள் அமைதியாகப் பேரணி நடத்தியபோது அதன் மீது குண்டு வீசப்பட்டது. தொழிலாளர்களின் ஒற்றுமையைப் பறைசாற்றும் இந்த சம்பவத்தை நினைவுகூரும் வகையிலேயே ’உழைப்பாளர் நாள்’ மே 1– அனுசரிக்கப்படுகிறது.

உழைப்பாளர் நாள்’ கொண்டாட வேண்டும் என்கிற கருத்தை முதன்முதலில் முன்மொழிந்தவர் மேத்யு மகுய்ர். 1882இ–ல் நியூயார்க் மத்திய தொழிலாளர் சங்கத்தின் செயலாளராக இருந்தபோது அவர் இதை வலியுறுத்தினார். அமெரிக்காவில் உழைப்பாளர் நாளை முதன் முதலில் விடுமுறை நாளாக ஆரிகான் மாகாணம் 1887ஈல் அறிவித்தது.

’இரண்டாம் அகிலம்’ எனப்பட்ட சர்வதேசத் தொழிலாளர் கூட்டமைப்பின் மாநாடு 1889இ–ல் பாரிஸில் நடைபெற்றது. அதில் சிகாகோ போராட்டங்களை நினைவுகூரும் வகையில் மே மாதம் உழைப்பாளர் நாளைக் கொண்டாட வேண்டுமென ரேமண்ட் லவிக்னே தீர்மானத்தை முன்மொழிந்தார். அதையடுத்து 1890இல் உலகின் பல நாடுகளில் உழைப்பாளர் நாள் கொண்டாடப்பட்டாலும் அதற்கு அடுத்த ஆண்டிலிருந்தே தொழிலாளர் இயக்கங்கள் உழைப்பாளர் நாளை முறைப்படி கொண்டாடத் தொடங்கின?

இன்று இலங்கையில் தொழிலாளர் தினத்தையொட்டி 40 அரசியல் கூட்டங்களும் பேரணிகளும் இடம்பெறுகின்றன. அவற்றில் அரைவாசி தலைநகர் கொழும்புவில் நடக்கின்றன. இருப்பினும் இந்த அரசியல் கூட்டங்கள் தொழிலாளர்களின் நலன்கள் மீது எந்தளவுக்கு அக்கறை செலுத்துகின்றன என்பது கேள்விக்குறிதான்.

தொழிலாளர் வர்க்கம் மேலும் மேலும் ஒடுக்கப்படும் இக்கட்டு நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது. பொறுப்பற்ற அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் காரணமாக நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தொழிலாளர்களே. அதுமட்டுமல்ல உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒட்டுமொத்தக் கடனின் சுமைச் சுமந்து சிரமப்படுபவர்களும் தொழிலாளர்களே! அவர்களின் சேமலாபநிதியத்தின்வட்டியைக்குறைத்துதொழிலாளர்களின் வியர்வையையும் குருதியையும் சுரண்டியிருக்கின்றது. அதுமட்டுமல்ல தம்மீதான அடக்குமுறையை எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாதவர்களாக வன்முறை மூலம் அவர்களை அடக்கி ஒடுக்கியும் வைத்திருக்கிறது.

பெருந்தோட்டத்துறையில்தமது உடல் உழைப்பைச்செலுத்தி நாட்டுக்கு பெருமளவில் அமெரிக்க டொலரை உழைத்துத் தரும் தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுத் தர முடியாத இன்றைய ஆளும் தரப்பு, ஊழியர் சேம லாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் மூலம் அவர்களின் ஓ;வுக் காலத்திற்குக் கிடைக்கும் சொற்ப சேமிப்பையும் சுரண்டுவது எந்த வகையில் நியாயம்?

இதற்கெதிராகதிரண்டெழுந்திருக்க வேண்டிய தொழிலாளர் வர்க்கம் கூர் மழுங்கிய கத்தியாக வீழ்ந்து கிடக்கின்றது. அதற்கு உரிய தலைமைத்துவத்தை வழங்கி வீறுகொண்டெழச் செய்வதற்கு எந்தவொரு அரசியல் தலைவருக்கும் திராணி இல்லை. பதிலாகதொழிலாளர்தினத்தைத்தமது அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கம் மட்டுமே அவர்களிடம் இருக்கின்றது. தமிழ் அரசியல் பரப்பிலோ சொல்லவே தேவையில்லை, தொழிலாளர் நலன்கள் பற்றித் தமிழ் அரசியல்வாதிகளுக்கு எந்தவொரு அக்கறையும் இல்லை. அவர்கள் தொடர்ந்தும் தமது தேர்தல் கால தேசியத்திலேயே குறியாக இருக்கின்றார்கள். இந்த நிலை மாறும் வரைக்கும் தமிழர்களுக்கும் தமிழ் தொழிலாளர்களுக்கும் எந்த விழவும் கிடையாது.

# அதிநாயக பிம்பமும் மிகை ஈடுபாடும்

**ராஜன் குறை கிருஷ்ணன்**

எம்.எஸ்.தோனி மிகச் சிறந்த விளையாட்டு வீரர். அவர் ஆடுவதை மிகவும் ரசித்துப் பார்த்திருக்கிறேன். ஒரு வகையில் என்னை மிகவும் கவர்ந்த கிரிக்கெட் ஆட்டக்காரர் அவர்தான் எனலாம். எதனால் என்றால் எனக்குச் சமநிலை குலையாமல் விளையாடுபவர்களை மிகவும் பிடிக்கும். ‘கேப்டன் கூல்’ என்று அழைக்கப்பட்ட தோனிஎந்தச்சந்தர்ப்பத்திலும்பதட்டம்அடையாமல் நிதானமாக இருப்பதை மிகவும் ரசிப்பேன்.

ஐந்து நாள் ஆடப்பட்ட டெஸ்ட் மேட்சிலிருந்து ஒருநாள்போட்டிகளும், டி20 போட்டிகளும்மிகவும் வேறுபட்டவை. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பந்துகளில் முதலில் ஆடிய அணி எடுத்த ரன்களைப் பின் தொடரும் அணி எடுத்தால் வெற்றி. இல்லாவிட்டால் தோல்வி. ஒவ்வொரு பந்தும் கணக்கு. டி20 பந்தயத்தில் மொத்தமே 120 பந்துகள்தான். இதுபோன்ற போட்டிகளில் உறுதியாக அடித்து ஆடும் தோனி போன்றவர்கள் ரசிகர்களைப் பெருமளவு ஈர்ப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. அதுவும்தொலைகாட்சியில்பார்த்து ரசிக்கும் கோடிக்கணக்கான ரசிகர்களுக்கு அவர் பெரும் நட்சத்திரமாக மாறுவதை இயல்பாகவே புரிந்துகொள்ளலாம்.

தோனி எண்ணிக்கையை துரத்தும் நிலையில் மைதானத்தில் இறங்கினால், எதிர் அணி எத்தனை ரன் வித்தியாசத்தில் முன்னணியில் இருந்தாலும், ஒரு பதட்டம் அவர்களிடையே உருவாவதை ரசித்திருக்கிறேன். ஏனெனில், அசாத்தியம் என்றுநினைத்ததைப்பலசந்தர்ப்பங்களில் சாத்தியமாக்கி இருக்கிறார். அதேபோல அவர் தலைமையிலான அணி பந்து வீசி எதிர் அணியின் ரன் சேர்ப்பைக் கட்டுப்படுத்த வேண்டி இருந்தால், அவர் முற்றிலும் எதிர்பாராத விதமாக பந்து வீசுபவர்களைத் தேர்வுசெய்வார். அது எதிர் அணி ஆட்டக்காரர்களைத் தடுமாறச் செய்த சந்தர்ப்பங்கள் பல. தோனியின் மேலாண்மைத் திறன் ஆய்வுப் பொருளானது.

### அதிநாயக பிம்பமான நாயகன்

இப்படிப் பல சிறப்புகளைக் கொண்ட தோனி இன்று அதிநாயக பிம்பமாக மாற்றப்பட்டுள்ளார் என்பதுதான் சோகம். வயதாகிவிட்டதால் இந்திய அணிக்காக விளையாடுவதிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். ஆனால், பெரும்வர்த்தகமான,



வெகுமக்கள்கேளிக்கையான டி20 ஆட்டத்திலிருந்து அவர் விடுபட முடியவில்லை. ஏனெனில், அவர் விளையாடுவதைப் பார்க்கவே மைதானத்திற்கு மக்கள் வருகிறார்கள்; தொலைக்காட்சி பெட்டிகளின் முன் அமர்கிறார்கள். அவர் மைதானத்தில் இறங்கும்போதுமைதானமேஉற்சாகஆரவாரத்தில், கோஷங்களில் அதிர்கிறது. பணம் குவிகிறது.

அவருடைய அணியான சென்னை சூப்பர் கிங்ஸ்அணிவெல்கிறதா, தோற்கிறதாஎன்பதைவிட தோனி மைதானத்தில் இறங்கினாரா, சிக்ஸர் அடித்தாரா என்பது ரசிகர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது. சமீபத்தில் தொலைக்காட்சி பார்வையாளர்களிடம் ‘நீங்கள் எதைப் பார்ப்பற்காக வேலையை விட்டுவிட்டு வருவீர்கள், சூர்யகுமார் யாதவ் சிக்ஸர் அடிப்பதைப் பார்க்கவா அல்லது தோனி மைதானத்தில் இறங்குவதை பார்க்கவா’ என்று கேட்டபோது எழுபது சதவீதம் பேர் தோனி மைதானத்தில் இறங்குவதைப் பார்க்கவே வருவோம் என்று பதில் அளித்தார்கள். தோன்றினாலே பரவசம், விளையாடவே வேண்டாம். சமீபத்திய மேட்ச்ஒன்றில் அவர்விளையாட வந்தவுடன்



மூன்று சிக்ஸர்கள் அடுத்தடுத்த பந்தில் அடித்தார். அது கடைசி ஓவர் என்பதால் இருபது ரன் எடுத்தார். எதிர் அணியான மும்பை அணி சிறப்பாகவே பதிலடி கொடுக்கத் தொடங்கியது. சென்னை அணியின் பந்து வீச்சாளர்கள், குறிப்பாக பதிரானா என்ற இளைஞர், சிறப்பாக பந்து வீசி சென்னைக்கு 20 ரன் வித்தியாசத்தில் வெற்றி தேடித் தந்தார்கள்.

ஆனால், அவர்கள் எல்லோரையும்விட தோனியே, அவர் அடித்த 20 ரன்களே வெற்றிக்குக் காரணம் எனச் சமூக ஊடகங்களில் பலரும் எழுதினார்கள். ஆட்டத்தின் நுட்பங்களை ரசிப்பது, மதிப்பிடுவது, திறமைகளை ஊக்குவிப்பது எல்லாமே இரண்டாம் பட்சமாகிவிடுகின்றன. அதிநாயக வழிபாடே பிரதானமாகிறது. அதுவே வசூலைக் குவிப்பதால் ஊடகங்களும் ஒத்தூதுகின்றன. பிம்பத்தை ஊதிப் பெரிதாக்குகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் நன்றாக கிரிக்கெட் விளையாடியதால் உருவான தோனி என்ற நாயக பிம்பம், இன்று கிரிக்கெட்டைவிட முக்கியமான அதிநாயக பிம்பமாக மாறிவிட்டது. கிரிக்கெட்டிற்காக தோனி என்பதைவிட, தோனிக்காக கிரிக்கெட் என்று மாறுகிறது. அதனால் என்ன, எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், அவ்வளவுதானே என்று தோன்றலாம். பிரச்சினை அத்துடன் நிற்ப தில்லை. பலவீனமான மனங்கள் இந்த அதிநாயக பிம்பங்களை வழிபடத் துவங்குகின்றன. தங்களை அந்தப் பிம்பங்களுடன் அடையாளப்படுத்திக்கொள்கின்றன. அந்தப் பிம்பங்களை யாராவது குறை சொன்னால் அவர்கள் மீது கோபம் கொள்கின்றன.

இதேபோலத்தான் டெண்டுல்கரும் கிரிக்கெட்டின் கடவுள் எனப் பூஜிக்கப்பட்டார். அவரும் மிகச் சிறந்த ஆட்டக்காரர்தான். ஆனால், அவர் ஆட்டமிழந்துவிட்டால் அத்துடன் ஆட்டத்தை பார்ப்பதையேநிறுத்திவிடுபவர்கள்பலரைஅறிவேன். அவருடன் ஆடிய பல சிறந்த ஆட்டக்காரர்கள் போதுமான அளவு மக்களால் ரசிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்படவில்லை. மற்ற யாரும் செஞ்சுரி அடித்தால், அதாவது நூறு ரன்கள் எடுத்தால் அது பெரிய ஆரவாரமாக இருக்காது; ஆனால்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# அதிநாயக பிம்பமும் மிகை ஈடுபாடும்

4ம் பக்க தொடர்ச்சி...........

டெண்டுல்கர் நூறு ரன்கள் எடுத்தால் ஊரே தீபாவளி கொண்டாடும். அலுவலகங்களில் அனைவருக்கும் இனிப்பு வாங்கித் தருவார்கள்.



**அதிநாயக பிம்பம் + மிகை ஈடுபாடு = வன்முறையின் ஊற்றுக்கண்**

இதுபோன்ற மிகை ஈடுபாடுகளுக்கு மற்றொரு ஆபத்தான பரிமாணமும் இருக்கிறது. மஹாராஷ்டிரத்தின் கோலாப்பூர் மாவட்டத்தில் மார்ச் 27ஆம் தேதி நடந்த சம்பவத்தைக் கவனிக்க வேண்டும். அண்டை வீட்டுக்காரர்களான இரு விவசாயிகள், நெடுநாள் நண்பர்கள், டி20 மேட்ச் சேர்ந்து பார்த்திருக்கிறார்கள். அவரகளில் 65 வயது நிரம்பிய பந்தோபந்த் டிபைல் என்பவர் ரோஹித் ஷர்மா ஆட்டமிழந்தவுடன் மும்பை இந்தியன் அணி தோற்றுவிடும், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வென்றுவிடும் என்று கூறியுள்ளார்.

ஐம்பைத்தைந்து வயதான பல்வந்த் ஷன்ஜகே கோபமடைந்து வாக்குவாதம் செய்துள்ளார். வார்த்தை முற்றி, பல்வந்த் ஷன்ஜகேவும் அவர் மருமகனும் சேர்ந்து டிபைலை கட்டைகளைக் கொண்டு தாக்கியதில் அவர் இறந்தே போய்விட்டார். அவர்களிடையே வேறு எந்த முன்விரோதமும் இருக்கவில்லை என்றே அக்கம் பக்கத்தார் கூறுகின்றனர்.

கிரிக்கெட் விளையாட்டை ரசிப்பதற்கும் இதுபோன்ற மனப்பிறழ்வான மிகை ஈடுபாடுகளுக்கும் தொடர்பில்லை. ஆனால், ஒவ்வொரு துறையிலும் எப்படி இத்தகைய அதிநாயக பிம்ப உருவாக்கமும், மிகை ஈடுபாடும் அடிப்படை விழுமியங்களையே சேதப்படுத்துகின்றன என்பதை நாம் கவனிக்க இந்த உதாரணங்கள் உதவும்.

மகிழ்ச்சிக்காக விளையாடுகிறோம்; விளையாட்டைப் பார்க்கிறோம். ஆனால், அதுவே வன்முறையை தோற்றுவிப்பது எத்தகைய விபரீதம் என்பதைச் சிந்திக்க வேண்டும். உலகம் முழுவதுமே விளையாட்டு ரசிகர்கள் கலவரத்தில் ஈடுபடுவது, வன்முறையில் ஒரு சிலர் உயிரிழப்பது நடக்கத்தான் செய்கிறது. தாங்கள் ஆதரிக்கும் அணி அல்லது ஆட்டக்காரர்கள் தோற்பதைத் தாங்க முடியாமல் ரசிகர்கள் வன்முறையில் ஈடுபடுவது பல சமயங்களில் நடக்கும்.

விளையாட்டில் மட்டும் இல்லை. தாயின் கருவறையில் உயிர்த்து, வெளிவந்து, வாழ்ந்து மாயும் நாம், நம்மை சாத்தியமாக்கும் இயற்கையை இறைவனாக உருவகித்து வழிபடுகிறோம். அதில் பரவசமாகி நாம் அனைத்தையும், அனைவரையும் நேசிக்கும் பண்பைப் பெற விழைகிறோம். ஆனால், நாம் உருவகித்து வழிபடும் இறைவனுடன் நம்மை அடையாளப் படுத்திக்கொண்டு, வேறொரு உருவகத்தை வழிபடுபவர்களை வெறுக்கத் தொடங்குகிறோம். கடவுளின் பெயரால் கொலை செய்யத் தொடங்குகிறோம். மானுட வரலாற்றில் அதிகபட்ச கொலைகள் அன்பே உருவான கடவுளின் பெயரால்தானே நடந்துள்ளன.

**கணியன் பூங்குன்றனின் குரல்**

சமூக நன்மைக்காக பாடுபடுபவர்களைத் தலைவர்களாக ஏற்கிறோம். அவர்களைப் பின்பற்றுகிறோம். மெள்ள மெள்ள அவர்களை அதிநாயகர்கள் ஆக்குகிறோம். அவர்கள் தலைமையை ஏற்காதவர்களை விரோதிகள் ஆக்குகிறோம். அதிநாயக பிம்பமும், மிகை ஈடுபாடும் இணையும்போது அங்கே பாசிஸ முனைப்பு தோன்றுகிறது. கருத்து மாறுபாடுகளை, விமர்சனங்களை வெறுக்கிறோம். அவற்றை எதிர்கொள்ள வன்முறையைக் கையாளத் துவங்குகிறோம். சமூக நன்மை இறுதியில் சமூக வன்முறையாக மாறிவிடுகிறது.

நாயகர்களை அதிநாயகர்களாக மாற்றுவதும், மிகை ஈடுபாட்டின் மூலம் நம்மை விமர்சன சிந்தனையற்ற அடிமைகளாக மாற்றிக்கொள்வதும் நம்முடைய சுயத்தின் பலவீனத்தால்தான் நிகழ்கிறது. நம்முடைய சுயத்திற்கு நாம் மரியாதை செலுத்தினால், சுயமரியாதையுடன் பகுத்தறிவுடன் வாழ்ந்தால் நாயகர்கள் அதிநாயக பிம்பமாக மாட்டார்கள். தமிழ்ப் பண்பாடு என்றோ இதனை கணியன் பூங்குன்றன் குரலில் அறிந்துகொண்டது.

விரிந்த மானுடப் பார்வையையும், சமநிலையையும் வலியுறுத்தும் பூங்குன்றன், வாழ்க்கை பெருமழை உருவாக்கிய சுழித்தோடும் வெள்ளத்தில் சிக்கிய மதகு பயணப்படுவதுபோல தற்செயல்களால் நிகழ்வது என்று உருவகிக்கிறார் எனலாம். அதனால் பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதினினும் இலமே என்று கூறுகிறார். அதிக நாயக பிம்பங்களின் மீதான மிகை ஈடுபாட்டிலிருந்து நம்மை தற்காத்துக்கொள்ள அவருடைய வரிகளே காப்பு.

**நன்றி: அருஞ்சொல்**




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழா



(வி.ரி.சகாதேவராஜா)

தம்பிலுவில்சமுர்த்திவங்கியின் சித்திரைப்புத்தாண்டுவிளையாட்டு விழா தம்பிலுவில் எதிரொளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.





விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சதிஸ் ஏற்பாட்டில்நடைபெற்றஇந்நிகழ்வில் பிரதமஅதிதியாகபிரதேசசெயலாளர் தங்கையா கஜேந்திரன் கலந்துசிறப்பித்தார்.

சமுர்த்தி பிரிவின் தலைமைப்பீடமுகாமையாளர் எம்.அரசரெத்தினம் , முகாமைத்துவ பணிப்பாளர் பி.கமலேஷ்வரன், விநாயகபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.சசிகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ,வலய வங்கி உதவி முகாமையாளர்கள்,வங்கி வலயகள உத்தியோகத்தர்கள்,திட்ட உதவியாளர், சமுர்த்தி தலைமை காரியாலய ச.அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பிரதேச மட்ட ,வங்கி க.பா.சபைத் தலைவர் கள்,வர்த்தக.ச.தலைவர் உறுப்பி னர்கள்,சமுர்த்தி உற்பத்தியாளர்கள், ச.வங்கி வாடிக்கையாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)

# பாலமுனை, அல் ஹிக்மா பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்தாய்வு





(கே எ ஹமீட்)

பாலமுனை, அல் ஹிக்மா பாடசாலை அபிவிருத்தி தொடர்பானகலந்துரையாடல்திங்கட்கிமைஇடம்பெற்றது.

இந் நிகழ்வில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் பைசால்காசிம்மற்றும்ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸின் முக்கிய பிரமுகர்களும் பங்கேற்றனர்.

குறித்த பாடசாலையின் பௌதீக தேவைகளை அறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், விரைவில் அவற்றுக்கு தீர்வுகளை வழங்குவதாக உறுதியளித்ததமை குறிப்பிடத்தக்கது.(05)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## உடல்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கிளை அலுவலகங்கள், இத்தீர்மானத்தை வெகுவிரைவில் நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுப்பார்எனஎதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளன.

உடலியல் ரீதியான தண்டனையை முடிவுக்குக்கொண்டுவருவதற்கானசர்வதேசதினமாகும். அதனை முன்னிட்டு இலங்கையில் உடலியல் ரீதியான தண்டனை வழங்கலைமுற்றாகத்தடைசெய்யும் விதமாக முன்மொழியப்பட்டுள்ள தண்டனைச்சட்டக்கோவைத் திருத்தத்தை தாமதமின்றி அமைச்சரவையில் சமர்ப்பிக்குமாறும்,அதனைஉடனடியாகஆளும் தரப்புக்குநடவடிக்கைஎடுக்குமாறும் அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதை இலக்காகக்கொண்டு வைத்திய கலாநிதி துஷ் விக்ரமநாயக்கவின் தலைமையில் இயங்கிவரும் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான நிதியமும்அவரதுஒருங்கிணைப்பில் இயங்கும் சிறுவர் பாதுகாப்புக் கூட்டமைப்பும்இணைந்து,பல்வேறு துறைகளிலும் பிரபலமான மேலும் 19 பேரையும் உள்வாங்கி, 'நோ குட்டி 2.0' (சிங்கள சொற்பதமான இது தமிழில் 'அடி வேண்டாம்' எனும் அர்த்தத்தை வழங்கும்) எனும் சமூகவலைத்தள பரப்புரை ஒன்றை ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து செவ்வாய்க்கிழமை (30) வரையான 30 நாட்களுக்கு முன்னெடுத்துவந்தன.

தண்டனைச் சட்டக்கோவைத் திருத்தத்தை பிரதானமாக வலியுறுத்தும்அப்பிரசாரம்செவ்வாய்க்கிழமை (30) முடிவுக்குவந்த நிலையில், திங்கட்கிழமை (29) இரவு 11.00 மணியளவில்தனதுஉத்தியோகபூர்வ எக்ஸ்தளத்தில்பதிவொன்றைச்செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சகல விதமான உடலியல் ரீதியான தண்டனைகளையும் தடைசெய்வதற்குரிய தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைக்கோவைத் திருத்தங்களுக்கு நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்.

'ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தின் 19ஆம் பிரிவானது சிறுவர்களுக்கு எதிரான அனைத்துவிதமான வன்முறைகளிலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்படவேண்டுமெனவலியுறுத்துகின்றது. அதேபோன்று சிறுவர் உரிமைகள் தொடர்பான குழுவானது உடலியல் ரீதியான தண்டனைகள் தடைசெய்யப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளது. எனவே இந்த அமைச்சரவை ஒப்புதலானது இலங்கையில் சிறுவர்கள் அனைவரும் எந்தவொரு உடல் மற்றும் உளவியல் ரீதியான வன்முறைகளுக்கும் உள்ளாகாதிருப்பதை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கும்' எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிவிப்பு தொடர்பில் தனது பாராட்டை வெளிப்படுத்தியிருக்கும் 'நோ குட்டி 2.0' எனும் சமூகவலைத்தளப் பிரசாரத்துக்குத் தலைமைதாங்கிய துஷ்விக்ரமநாயக்க, தேர்தல்களுக்கு அழைப்புவிடுப்பதற்கு முன்னதாக இச்செயன்முறையைப் பூரணப்படுத்தி, அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப்பெற்று, செயற்திறனான அமுலாக்கத்தை உறுதிசெய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டிருக்கும்இலங்கைக்கான ஐ.நா வதிவிடப்பிரதிநிதி மார்க்-அன்ட்ரூ பிரான்ச், 'சகல விதங்களிலுமானஉடலியல்ரீதியான தண்டனைகளைத்தடைசெய்வதற்கு அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை வரவேற்கின்றேன். பாராளுமன்றத்தின் ஊடாக இத்திருத்தங்கள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கின்றோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறுவர்களின் சுகாதாரம் மற்றும் நலனுக்கேஅதியுயர்முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.

உடலியல் ரீதியான தண்டனைகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான சர்வதேச தினத்தில் இலங்கையிலிருந்து சிறப்பான செய்தியொன்று கிடைத்திருப்பதாக இலங்கையிலுள்ள யுனிசெப் அலுவலகம் தெரிவித்துள்ளது. அதுமாத்திரமன்றி இந்நடவடிக்கையானது சிறுவர் உரிமைகள் பாதுகாப்பை முன்னிறுத்திய மிகமுக்கிய நடவடிக்கையாக அமையும் எனவும் அவ்வலுவகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கொவிஷீல்ட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்போர்ட் பல்கலைக்கழகமும் இணைந்து உருவாக்கின. அதனை இந்திய சீரம் நிறுவனம்; தயாரித்தது.

இந்நிலையில், குறித்த தடுப்பூசிக்குஎதிராகபிரித்தானியாவில் மாத்திரம் அஸ்ட்ரா செனெக்கா நிறுவனத்திற்கு எதிராக பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கெஹலியவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவதாக மேன்முறையீட்டு நீதிபதி டி.என். சமரகோன் அறிவித்துள்ளார்.

ஹீமோகுளோபின்மருந்துகளை இறக்குமதி செய்வதில் இடம்பெற்ற மோசடி தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தினால் தன்னை வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தஉத்தரவைஇரத்துச்செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

## நீதியரசர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதியினால்முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நிராகரித்து, சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்புபேரவைஅடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக தெரிவித்து நபரொருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு நேற்று மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி பி.பீ.எஸ்.எம். பதிரனவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்ததோடு நீதிபதிகளான துரைராஜா, நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய உயர் நிதீமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முறையான நடைமுறையை பின்பற்றாது, உயர் நீதிமன்றத்திற்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட நீதியரசரின் பரிந்துரையை நிராகரித்ததன் மூலம், அரசியலமைப்பின் 12 ஆவது சரத்தின் கீழ் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்பதை விசாரணை செய்வதற்கு நீதியரசர்கள் குழாம் அனுமதி வழங்கியது.

மனு மீதான விசாரணைக்கு அனுமதி வழங்கிய நீதியரசர்கள் குழாம், விசாரணைநிறைவடையும் வரை அமுலாகும் வகையில், இந்த இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்தது. மனுமீதானவிசாரணை எதிர்வரும் ஒக்டோபர் 04 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிக்கப்பட்டது.எனினும்தற்போது செலவுகள்அதிகரித்துள்ளன.இதனால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடுகளின் அடிப்படையில் சீரமைப்புப்பணிகளைமேற்கொள்ள முடியாது என்பது இந்தியாவிற்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்தே மீள் மதிப்பீடுகளுக்கான செலவைத் தருவதற்கு இந்தியா இணங்கியுள்ளது.

இதுவேளை, அரச மற்றும் தனியார் ஒத்துழைப்புடன் இந்த வேலைத் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் இந்திய அரசுடன் கலந்துரையாடஉள்ளதாகஇலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் கூட்டங்கள் மற்றும் பேரணிகள் காரணமாக இந்த விசேட போக்குவரத்துத் திட்டத்தை பொலிஸார் அறிவித்துள்ளனர் என்றார்.

## பணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். இது தொடர்பில் இலங்கைபோக்குவரத்துசபையின் தலைவருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், மே பேரணிக்குபல்வேறுதரப்பினருக்கு பஸ்களை வழங்குவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது போக்குவரத்தை தடை செய்யாத வகையில் எந்தவொரு அரசியல் கட்சி, தொழிற்சங்கம் அல்லதுவேறுஎந்ததரப்பினருக்கும் பணம்செலுத்தியபின்னர்பஸ்களை வழங்குமாறு இ.போ.ச தலைவர் உள்ளிட்ட முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்;. எந்தவொரு நிறுவனத்திற்கும், பணம் செலுத்தாமல் பஸ்கள் விடுவிக்கப்பட மாட்டாது எனவும், பஸ்களை விடுவிப்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில்ஏற்கனவேஒரு வழக்கு இருப்பதாகவும்; அமைச்சர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## தொலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அந்த வகையில் இச்சட்ட மூலம் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தொலைத்தொடர்புகள்திருத்தச்சட்ட மூலத்திற்காக சட்டமா அதிபரின் அனுமதியும்கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடவும் பின்னர், நாடாளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கும் தொழில்நுட்ப அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரம்சிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## உமா ஓயா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரூற்றுக்களை காண்பித்து மக்களை தவறாக வழிநடத்த சிலர் முயற்சிப்பதாகமின்சக்திமற்றும்வலசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை நிறைவு செய்வதற்கு 9 வருடங்கள் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக நாட்டுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. ஏற்பட்ட இழப்பு 587 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு 529 மில்லியன் டொலர்களாகப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் கடந்த 09 வருடங்களில் உமா ஓயா திட்டத்தின் ஊடாக மின்சார உற்பத்தி மேற்கொண்டு அதனை தேசிய கட்டமைப்பில் சேர்க்க முடியாமல் போனதால் இத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகைக்கு நிகரான இழப்பைசந்திக்கவேண்டியிருந்தது.

அத்துடன் உமாஓயாதிட்டத்தின் மூலம் மின்சார உற்பத்தியை தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட்ட நிலையில் இந்த திட்டத்தினால் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக கூறி மக்களை தவறாக வழிநடத்தும் ஊடக நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக தெரிகிறது.

மழைக்கு பின் தோன்றும் சிறிய அருவிகளை காட்டி இந்த வளர்ச்சி திட்டத்தை சீர்குலைக்கும் பணியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இந்த திட்டத்துடன்தொடர்புடையமண்சரிவு அல்லது வேறு எந்த சம்பவமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், உமா ஓயா பிரதேசத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் விரிசல்கள் மற்றும் நீர்க்கசிவுகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக நாளை (01) பூகற்பவியலாளர்கள் குழுவொன்று கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அங்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், அதற்கெல்லாம் தொழில்நுட்ப ரீதியிலான தீர்வுகள் உள்ளன என்பதை அரசாங்கம் என்ற வகையில் நாங்களும் பொறுப்புடன் கூறுகிறோம்.

அப்படி இருந்தால், அதை எப்படி தடுப்பது என்பது பற்றிய அனுபவம் உலகம் முழுவதும் உள்ளது. கடந்த காலங்களில் சிலரின் நாசவேலைகளால் நாடு இவ்வாறான பல அபிவிருத்தித் திட்டங்களை இழந்தது. 2015 ஆம் ஆண்டு நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டது, ஆனால் நீதிமன்ற நடவடிக்கைகளால் அது இழக்கப்பட்டது.

கெல்வரபிடிய எல்.என்.ஜி. (LNG) ஆலை மற்றும் பல்வேறு சிறிய மின் உற்பத்தி நிலையங்கள் போராட்டங்கள் மூலம் இழக்கப்பட்டன. இவ்வாறாக பொதுமக்களைஅச்சுறுத்தும்மற்றும் தூண்டிவிடக்கூடிய செய்திகள் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டிற்கு இல்லாமல் போய்விட்டன. எனவே, உண்மை தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மின்சார உற்பத்தியில் 70% புதுப்பிக்கத்தக்கவலுசக்தியில்இருந்து பெறுவது என்ற கொள்கை முடிவை எங்கள் ஆளும் தரப்பு எட்டியுள்ளது. நீர், சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

10மெகாவோர்ட்டிற்குகுறைவான காற்றாலை அல்லது சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களை விரைவாகப் பெற மின்சார சபை மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை இணைந்து புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தைப் பெற முடியாவிட்டால், எதிர்காலத்தில் இன்னொரு மின் நெருக்கடி உருவாகலாம்.

மின்உற்பத்திநிலையங்களுக்கு அனுமதிப் பத்திரங்களைப் பெற்று ஆலைகளை தொடங்காமல் காலதாமதம் செய்து, அந்த அனுமதிப் பத்திரங்களை அதிக தொகைக்கு ஏனைய தரப்பினர்களுக்குவிற்பனைசெய்யும் மாபியாவையும் கண்காணித்து வருகின்றோம். எனவே, மின் உற்பத்தி நிலையங்களை விரைவுபடுத்துவதற்கான புதிய திட்டத்தை தற்போது தொடங்கியுள்ளோம். அதன்போது புள்ளி முறைமை மூலம் அனுமதி வழங்கி, உற்பத்தி செய்யப்படும்மின்சாரத்தைசரியான நேரத்தில் விரைவாக சேகரிக்கும் செயற்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

5 முதல் 500 மெகாவோர்ட் வரையிலான மேற்கூரை சோளார் பெனல் திட்டங்களால் கடந்த காலத்தில் மாதத்திற்கு சுமார் 22 மெகாவோர்ட்களை மட்டுமே பெற முடிந்தது. ஆனால் இந்த நிலை குறித்து முறையான ஆய்வுகளைச் செய்த பிறகு மார்ச் மாதத்துக்குள் அந்தஅளவை40மெகாவோர்ட்டாக உயர்த்த முடியும் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் பதவிக்கு மூவர் பெயர்கள் பேரவையினால் பரிந்துரை







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலங்கைதென்கிழக்குபல்கலைக்கழகஉபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விஷேட பேரவை ஒன்றுகூடல் திங்கட்கிழமை பேராசிரியர் கொலின் என் பீரிஸ் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கொழும்பில் உள்ள கல்வித்திட்ட மையத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் கோரப்பட்டுள்ளத்தான் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின்கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் முதலாவதாக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும் இரண்டாவதாகபேராசிரியர்ஏ.எம். றஸ்மி,மூன்றாவதாக பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப் ஆகியோர் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களது முதலாவது பதவிக்காலம் எதிர்வரும் 2024.08.09 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுவின்சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.எம்.நௌபர்விண்ணப்பங்களுக்கானஅழைப்பை கடந்த 2024.02.08 ஆம் திகதி விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழுபேர் விண்ணப்பித்திருந்தனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி ஆறாவது உபவேந்தராக நியமிப்பார்.(05)

# பதுளையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்







லைக்கா ஞானம் அறக்கட்டளையின்ஏற்பாட்டில் பதுளை வால்டிமார் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கானகற்றல்உபகரணங்கள் திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஸ்தாபகர்அல்லிராஜாசுபாஸ்கரனின் வழிகாட்டலில் பதுளை மாவட்டத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளும் பாடசாலைகளில்ஒன்றானவால்டிமார்தமிழ்வித்தியாலயத்தின் அவசரத் தேவைகளைக் கண்டறிந்து லைக்கா ஞானம் அறக்கட்டளை நிவர்த்தி செய்தது.

இந்நிகழ்வில்வால்டிமார் தமிழ்வித்தியாலயத்தின்125 மாணவர்களுக்குஅத்தியாவசியமான பாடசாலைப் பைகள் மற்றும் எழுதுபொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. நேரடிபயனாளிகள் தவிர பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற அதிபர், வலயக்கல்வி அலுவலக ஊழியர்கள் மற்றும் லைக்கா ஞானம் அறக்கட்டளை குழுவின் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தேவைப்பாடுள்ள மாணவர்களைக் கண்டறிந்து செயலூக்கமான அணுகுமுறை மற்றும் ஒருங்கிணைந்தமுயற்சிகள்மூலம்,லைக்கா ஞானம்அறக்கட்டளையின்பார்வையின்கீழ்கொண்டுவந்ததூடுஅறக்கட்டளை உடனடி தேவைப்பாடுகளுக்கான உதவிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இந்த மாணவர்களுக்கு பிரகாசமான எதிர்கால கல்விக்கான அடித்தளத்தையும் அமைத்துள்ளது.

பாடசாலைப் பைகள் மற்றும் எழுதுபொருள்கள்போன்றஅத்தியாவசியமாகக் கல்வி கற்றலுக்குத் தேவையான பொருள்களை வழங்குவதை உறுதி செய்வதன் மூலம், லைக்கா ஞானம் அறக்கட்டளை அப் பகுதியின் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. இந்நிகழ்ச்சிதிட்டத்தை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கவும் எதிர்பார்க்கிறது.(05)

# உழைப்பவர் உழைப்பைப் போற்றிடும் உயர்தினம் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**

மேதினம் என்பது விடி வெள்ளியாகும்
வியர்வையைச் சிந்துவார் உயர்வினைக் காட்டும்
சாதனை நாயகர் தம்மையே போற்றிட
பூதலம் மீதிலே பூத்தநல் நாளாகும்
உழைப்பினை நல்குவார் உழன்றுமே இருந்தனர்
உழைப்பினை உறுஞ்சுவார் உயர்ந்துமே நின்றனர்
உழைப்பினை நல்குவார் உணர்வுடன் எழுந்தனர்
உழைப்பினை உறுஞ்சுவார் ஓரமாய் ஒதுங்கினர்

முதலைக் கொடுத்தவர் முதலையாய் நின்றனர்
முயற்சியைக் கொடுத்தவர் முடங்கியே கிடந்தனர்
முயற்சியைக் கொடுத்தவர் எழுந்தனர் கனலாய்
முதலைகள் அனைத்தும் சுருண்டுமே போயின

உண்ணும் உணவும் உடுக்கும் உடையும்
உறையும் வீடும் உழைப்பின் வரமே
மண்ணைப் பொன்னாய் மாற்றிடும் உழைப்பை
மாநிலம் நினைக்கவே மேதினம் வந்தது
எத்தனை பேர்கள் இரத்தம் சிந்தினர்
அத்தனை பேரும் உழைக்கும் மைந்தர்கள்
உழைப்புக் கூதியம் உயர்வாய் கேட்டால்
கேட்டவர் வாழ்வை கிழித்துமே போட்டனர்

களைப்பே இன்றி உழைப்பைக் கொடுத்தார்
கண்ணீர் கடலில் மூழ்கியே நின்றார்
காசினைக் கருத்தில் கொண்டுமே இருந்தார்
கடும் உழைப்பதனை காணா நின்றார்

முதலை ஆண்டவர் முதலாளி ஆகினார்
தொழிலில் இருந்தவர் துவண்டே கிடந்தார்
வளமும் உரமும் வழங்கிய மக்கள்
உளமும் மடிந்து உழன்றே கிடந்தார்

எத்தனை பொருட்கள் எத்தனை உழைப்பு
எத்தனை வேதனை இடருடன் வாழ்க்கை
இத்தரை உழைப்பவர் சித்தத்தில் வைப்போம்
இடரினைப் போக்கிட எல்லோரும் இணைவோம்
ஓடப்பராய் இருந்தார் உழைத்திடு மக்கள்
உயரப்பராய் வந்தால் உயர்ந்திடும் உழைப்பு
வாடப்பராய் இருப்பார் மனவுறுதி கொண்டால்
வையகமே வாகைசூடி வரவேற்ற நிற்கும்

வையகமே வியந்து பார்த்திட்ட நாளாய்
வருடத்தில் மேதினமே மலர்ந்துமே இருக்கு
மேதினத்தில் வியர்வையெலாம் வெற்றியையே காட்டும்
மேதினத்தில் உழைப்பாரை அரவணைத்து மகிழ்வோம்

உழைப்பவர் கரங்கள் ஓங்கிட வேண்டும்
உழைப்பவர் வாழ்வும் உயர்ந்திட வேண்டும்
உழைப்பவர் உழைப்பை மதித்திடு நாளாய்
உலகமே போற்றுது மேதின நாளை

# கல்முனை பொது நூலகத்தில் பண்டிகை நிகழ்வு நடந்தது



(அஸ்லம் எஸ்.மௌலானா)



ரமழான் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு என்பவற்றைமுன்னிட்டுகல்முனை பொது நூலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட கொண்டாட்ட நிகழ்வு திங்கட் கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதமஅதிதியாககலந்துசிறப்பித்தார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரான என். பரமேஸ்வர வர்மன் ஆகியோரும் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.



இதன்போது பண்டிகைகளை சிறப்பிக்கும்வகையில் நூலக உத்தியோகத்தர்களால்தயாரிக்கப்பட்டிருந்தபலகாரங்களைக் கொண்ட விருந்துபசாரமும்இடம்பெற்றது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# மாடுகள் கடத்திய முயற்சி வவுனியாவில் முறியடிப்பு

## 7 பேர் கைது

முல்லைத்தீவில் இருந்து பேருவளை மற்றும் கல்முனைக்கு இரண்டு லொறிகளில் நெல் கொண்டு செல்வதாக கூறி மாடுகளை ஏற்றிச் சென்ற ஏழு பேர் வவுனியா நகரில் 44 மாடுகளுடன் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நீண்டகாலமாக இந்த மாடுகளை ஏற்றிச் செல்வதாகவும், பொலன்னறுவையில் உள்ள அரிசி ஆலைகளுக்கு நெல் கொண்டு செல்லும் போர்வையில் பக்க வீதிகளை பயன்படுத்தி மாடுகளை ஏற்றிச் செல்வதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு லொறிகளில் இருந்த பசுக்களில் பெரும்பாலானவை கருவுற்ற பசுக்கள் என்றும், சில மாடுகள் நோய்வாய்ப்பட்ட விலங்குகள்என்றும்பொலிசார்தெரிவித்தனர்.

வவுனியா மற்றும் முல்லைத்தீவில் மாடு கடத்தலில் ஈடுபடுபவர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து திருடப்பட்ட மாடுகளை ஏற்றிச் செல்வதும் இதன் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கஹட்டகஸ்திகிலிய, இகிரிகொல்லாவ மற்றும் வெலிசறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சி தனபால, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சமந்த விஜேசேகர ஆகியோரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் சந்தேக நபர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

வவுனியா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் எம்.கே.அழகியவண்ண, உப பொலிஸ் பரிசோதகர் ஜீவண்ண, பொலிஸ் சார்ஜன்ட் ரன்வல, பொலிஸ் கான்ஸ்டபிள் வீரசேன, பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி திஸாநாயக்க ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05 - 100)

# விவசாய திணைக்களத்தின் ஒருங்கிணைந்த விழிப்பூட்டல்



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஒருங்கிணைந்த விழிப்பூட்டல்நிகழ்வுபாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள வம்மியடியூற்று கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பாலையடிவட்டை விவசாய போதனாசிரியர் ரீ.கோபி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் கலந்துகொள்ள பாடவிதான உத்தியோகத்தர்களான லக்ஸ்மன் மற்றும் மாறன் கிராம சேவை உத்தியோகத்தர் தெற்குவலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய அமைப்புகள் விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாமரங்கள் மற்றும் பழமரங்களின் கத்தரித்தல் பழக்கப்படுத்தல் பசளைப்பிரயோகம் விவசாய இரசாயனங்களின் முறையான பயன்பாடு கொடித்தோடை நடுகை மற்றும் பராமரிப்பு என்பன பற்றிய செய்துகாட்டல்கள் விவசாய



போதனாசிரியர்களால் தெளிவூட்டப்பட்டதுடன் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட கௌபி அறுவடையும் இடம்பெற்றது.

விவசாயிகளுடனான கலந்துரையாடலில் விவசாயிகளின் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அதற்கான தீர்வுகளை வழங்குவதாக பிரதி விவசாய பணிப்பாளர் உறுதியளித்தார். (05)

# கனமூலையில் நோன்புப் பெருநாள் விளையாட்டு போட்டி நிகழ்வுகள்!






(எம்.எச்.எம்.சியாஜ்)

கனமூலை சேகு அலாவுதீன் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாபெரும் விளையாட்டுப் போட்டி கனமூலை எம்.எஸ். சேகுஅலாவுதீன் பொது விளையாட்டு மைதானத்தில் முன்னாள் கற்பிட்டிப் பிரதேச சபைத் தலைவர் எம்.எஸ்.சேகு அலாவுதீன் தலைமையில் கோலாகலமாக இடம்பெற்றது.

நோன்புப் பெருநாளை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்த இவ்விளையாட்டுப் போட்டியில் சிறுவர்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டம், முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறுதல், பாய் இழைத்தல், முச்சக்கர வண்டி ஓட்டம், மோட்டார் சைக்கிள் ஓட்டங்கள் போன்ற இன்னும் பல களியாட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம். ரியாஸ், ஐக்கிய தேசிய கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் ஜேசுதாஷன் முந்தல் - மதுரங்குளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.எச். எம். ஹாறூன் உள்ளிட்ட மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து



சிறப்பித்தனர்.(05)

# கேன் நோயாளர்: காப்பகத்துக்கு ஆஸி. மருத்துவச் சங்கம் உதவி

## லயன்ஸ் கழகங்கள் ஊடாக




ஆஸ்திரேலிய மருத்துவ சங்கம், சுன்னாகம் லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம் நகர லயன்ஸ் கழகம் ஆகியவற்றினூடாக 28 லட்சம் ரூபா பெறுமதியானமருத்துவஉபகரணங்கள் சுன்;னாகம் கேன் புற்றுநோயாளர் காப்;பகத்துக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கேன் வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர், பொது வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி பா.நிஷாகன் லயன்ஸ் கழக ஆளுநர்களின்; ஆலோசகர்களான லயன் சி.ஹரிகரன்;, லயன் ஜெ.ரஜீவன், பிராந்தியத் தலைவர் லயன் பா. மரியதாஸ், வலயத் தலைவர்;களான லயன் க.டினேஷ், லயன் ரொனிகஜன், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.விஜயராஜ், யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் நிகேதன், யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழக உறுப்பினர் வைத்தியர் ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு வழங்கிவைத்தனர். (05)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி



(ஹஸ்பர் ஏ.எச்)

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானம் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கும்நோக்கோடு திருகோணமலைமாவட்டநலன்புரிச் சங்கம் நான்கு குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்றரைலட்சம் பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம், குழாய்கள் மற்றும் தூவல் நீர் பாசனக் கருவிகளை இம்மாதத்தில் இரண்டாவது முறையாக திங்கட்கிழமை வழங்கியது.

இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் திருகோணமலையில் வைத்து வழங்கி வைத்தார்.(05)

## பாடசாலை வரவுக் குழு தொடர்பான செயலமர்வு



(காரைதீவு சகா)

கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் அறிவுறுத்தலில் சம்மாந்துறை வலயக்கல்வி முறைசாராக் கல்விப்பிரிவு கோட்டம் தோறும் வரவுக்குழு செயலமர்வுகளை நடாத்தி வருகின்றது.

அந்தவகையில் திங்கட்கிழமை நாவிதன்வெளி கோட்டத்திற்கான செயலமர்வு நாவிதன்வெளி அன்னமலைமகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வளவாளர்களாகஉதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் எம்ஜ. அகமட் லெவ்வை ஆகியோர் விளக்கமளித்தனர்.

22பாடசாலைகளின்வரவுக்குழு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதேவேளை கடந்த வாரம் சம்மாந்துறை கோட்டத்திற்கான செயலமர்வுசம்மாந்துறைகோட்டக் கல்விகாரியாலயத்தில்நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.(05)



# ரூ. 70 லட்சம் பெறுமதியான பீடி இலைகளுடன் 3 வயதுச் சிறுவன் உள்ளிட்ட நால்வர் கைது



இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட எழுபது லட்சம் ரூபா பெறுமதியான 1346 கிலோ பீடி இலைகளுடன் நான்கு சந்தேக நபர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர் .

கல்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் .

இவர்களிடமிருந்து, 42 பொதிகளில் பொதி செய்யப்பட்ட பீடி இலைகள் , இவற்றைக் கடல் மார்க்கமாக ஏற்றிச் சென்ற படகு, தரைவழி போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட லொறி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேசத்தை சேர்ந்த 03 வயதுடைய சிறுவன் , கல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன், ஜனசவிபுர பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய இரண்டு இளைஞர்கள் ஆகியோர் கைதானவர்களில் அடங்குவர்.

காலம் காலமாக இந்தியாவிலிருந்து கல்பிட்டி கடல் வழியாகப் பீடி இலைகள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதன் காரணமாக ஆண்டுக்கு கோடிக்கணக்கான சுங்க வரிகளை நாடு இழக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது .

(05)

# யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 3 உணவகங்களுக்குச் சீல்!



யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய மூன்று உணவகங்கள் நீதிமன்ற உத்தரவில் சீல் வைத்து மூடப்பட்டுள்ளன.

திருநெல்வேலி பகுதியில் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டு, குறைபாடுகள் இனங்காணப்பட்ட உணவகச்களிற்கு, திருத்த வேலைகளிற்கான அறிவுறுத்தல்கள் எழுத்து மூலமாக வழங்கப்பட்டு கால அவகாசமும் உணவகங்களுக்கு வழங்கப்பட்டு இருந்தது.



இந்நிலையில், மறுபரிசோதனைக்காக திங்கட்கிழமை குறித்த உணவகத்திற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் சென்ற போது குறைகள் சீர் செய்யப்படாததை அடுத்து , மூன்று உணவக உரிமையாளர்களுக்கும் எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்குவிசாரணையின்போதுஉரிமையாளர்கள் குற்றத்தைஏற்றுக்கொண்டதைஅடுத்து, அவர்களுக்கு 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மன்று , உணவகச் சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகங்களுக்குச் சீல் வைக்குமாறு உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவை அடுத்து மூன்று உணவகங்களுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளன. (05)

# வனவள பாதுகாப்பு பிரிவால் மானிப்பாயில்: இருவர் கைது

மானிப்பாய்பகுதியில்உள்ளவீடொன்றில் பாலை மற்றும் முதிரைகுற்றிகள் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தநிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை யாழ்.மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெட்டப்பட்டு முத்திரை மற்றும் பாலை மர தீராந்திகள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு கொண்டுவரபட்டன என வனவளபாதுகாப்புதிணைக்களத்திற்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய திணைக்களத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனை நடவடிக் கைகளை முன்னெடுத்தனர் .

இதன் பொழுது 30 முதிரை மரகுற்றிகள் மற்றும் 33 பாலை மர தீராந்திகளுடனும் இரண்டு சந்தேகநபர்களை கைது செய்தனர்.

கைது செய்யபட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(05)

# பழுகாமத்தில் இடம்பெற்ற மாபெரும் கலாசார விளையாட்டு விழா நிகழ்வு





மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேசசெயலகத்திற்குட்பட்டபழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய புத்தாண்டு மாபெரும் கலாசார விளையாட்டு விழா நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலய விளையாட்டுமைதானத்தில்கழகத்தின் தலைவர் மு.குகதாசன் தலைமையில் இடம்பெற்றது.





இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா யுலேக்கா முரளிதரன் கலந்துகொண்டதுடன், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இதன்போது சமநிலை ஓட்டம், சாக்கு ஓட்டம், முட்டி உடைத்தல், வழுக்கு மரம் ஏறுதல், சிறுவர்களுக்கான மிட்டாய் ஓட்டம், பலூன் உடைத்தல், தேங்காய் துருவுதல், கயிறு இழுத்தல், துவிச்சக்கர வண்டி ஓட்டம், தோணி ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றதுடன்போட்டிநிகழ்ச்சிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.(05)

# நயினாதீவில் பஸ்சேவை இன்றி மக்கள் தவிப்பு

நயினாதீவில் சேவையில் ஈடுபட்டு வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் பழுதடைந்துள்ளமையால் , பஸ் சேவைகள் இன்றி பலரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.

நயினாதீவில் ஒரு பஸ், தீவினுள் போக்குவரத்து சேவையில் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்துள்ளது. நயினாதீவிற்கு வேலைக்கு செல்வோர் , சுற்றுலா செல்வோர் பிரதேசவாசிகள் என பலரும் தீவினுள் தமது போக்குவரத்திற்கு பஸ் சேவையையே பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் சேவையில் ஈடுபட்டு வந்த பஸ் பழுதடைந்துள்ளமையால் , பஸ் சேவை இன்றி பலரும் கால் நடையாகவே தமது பயணத்தை தொடர வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

எனவே விரைந்து பஸ் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா ஏ 9 வீதியில் மது போதையில் தனியார் பஸ் செலுத்திய சாரதி கைது



வவுனியா, ஏ9 வீதியில் மது போதையில் தனியார் பஸ் செலுத்திய சாரதி ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா, போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதியில் போக்குவரத்து பொலிசார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த போது ஏ9 வீதியில் பயணித்த தனியார் பஸ் ஒன்றின் சாரதி மது போதையில் பஸ்ஸை செலுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பஸ்ஸூம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் சாரதியை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப்; பொலிஸார் தெரிவித்தனர். (05 - 100)

# மதரஸாவுக்கு நிதி ஒதுக்கீடு




(நூருல் ஹுதா உமர்)

திகாமடுல்லமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாவிதன்வெளி நூரானியா ஜும்மா பள்ளிவாசல் மதரஸாவுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான ஆவணங்கள் நிர்வாகத்திடம் வழங்கி வைத்தார்.

நாவிதன்வெளி நூரானியா ஜும்மா பள்ளிவாசல் மதரஸாவுக்கு நிர்மாண பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட இந்த நிதிக்கான ஆவணங்களை கையளித்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், பிரதேச அமைப்பாளருமான ஏ.சி.ஏ. நஸார் ஹாஜி, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி நவாஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, பள்ளிவாசல் நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# 14 கிலோ போதை பொருள்களுடன் இருவர் காத்தான்குடியில் கைது



மட்டக்களப்புகாத்தான்குடிபொலிஸ்பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி பிரதேசத்தில் 14 ஆயிரத்து 570 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள்களுடன் இருவரை மட்டக்களப்பு குற்ற விசாரணை பிரிவினர் கைது செய்துள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்கா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 5 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் கீழ்ப்பகுதியில் மறைத்து வைத்து மேற்படி ஐஸ் போதைப்பொருள் எடுத்துவரப்பட்ட நிலையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடிமையவாடிவீதி மற்றும் காத்தான்குடி ஆறாம் குறிச்சி பிரதேசங்களை சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பிரபல மென்பானம் ஒன்றின் காத்தான்குடி பிரதேச முகவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ் போதை பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கடத்தலுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கொடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர் . காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (05)

# சைவப் புலவர் சங்க பரீட்சை

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப் புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் வைகாசி மாதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகஅகிலஇலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு உரைநடை பிற்பகல் 2 மணிக்கு வரலாறு 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலக்கியம் பிற்பகல் 2 மணிக்கு இலக்கணம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு சாத்திரம் ஆகிய பாடங்கள் இடம்பெறவுள்ளது பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் மட்டக்களப்பு ஆணைப்பந்திஇந்துமகளீர்கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் வைகாசி 2 ஆம் வாரம் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் சுகவீன விடுமுறை போராட்டம்



வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ள சுகவீன விடுமுறை பணிப்புறக்கணிப்பு காரணமாக மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ,கிராம அலுவலர்கள் பிரிவுகளில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அலுவலகங்கள்உள்ளிட்டவையின் செயற்பாடுகளும் பாதிப்படைந்து காணப்பட்டன. .சேவை பெற வருகின்றமக்களும்திரும்பிசெல்ல வேண்டியநிலையைஅவதானிக்க முடிகிறது. (05 - 113)

# வடமராட்சி கிழக்கு மாமுனையில் இருவர் கடற்படையினரால் கைது





சட்டவிரோதமாக கணவாய் மீனை பிடிப்பதற்க்காக இலை குழைகளை படகில் ஏற்றிச்சென்ற இருவர் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்பகுதியில் இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிகசட்டநடவடிக்கைகளுக்காக தாளையடி கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Toxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
DOWNLOAD DRIVER APP
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
JRIDE TAXI APP
SPEED IT NET
+94 703 563213
www.jride.lk